<u>குற்றவியல் நீதித்துறை நடுவர் நீதிமன்றம் எண்.2, சாத்தூர்</u>
முன்னிலை: திரு.சா.வரதராஜன், பி.ஏ.,பி.எல்.,
நீதித்துறை நடுவர் எண்.2, சாத்தூர்.
2026 ம் ஆண்டு மார்ச் மாதம் 6 ம் நாள் வெள்ளிக்கிழமை
<u>குற்றவியல் பல்வகை மனு எண். 287/2026</u>
<u>In</u>
<u>குற்றவியல் பல்வகை மனு எண். 226/2026</u>

மாரிச்செல்வம்,
த/பெ.கணேசன்,
வடக்குத்தெரு,
ஆலங்குளம்,
திருவேங்கடம் தாலுகா,
தென்காசி மாவட்டம். ...மனுதாரர்/எதிரி

/இடையே/

அரசுக்காக
காவல் உதவி ஆய்வாளர் ,
சாத்தூர் காவல் நிலையம்,
விருதுநகர் மாவட்டம்.
குற்ற எண்.45/2026 ...குற்றமுறையீட்டாளர்

மனுதாரர்கள் வழக்கறிஞர் திரு.மகேஸ்வரன், B.com.,L.L.B.,
அரசு தரப்பில் அரசு குற்றத்துறை வழக்கறிஞர் நிலை – 2

<u>உத்தரவு</u>

1. மனுதாரர் எந்த குற்றத்தையும் செய்யவில்லை என்றும், அவருக்கு எதிராக எதிர்மனுதாரர் காவல்நிலையத்தில் 303(2) BNS ன் கீழ் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட்டுள்ளதாகவும், கடந்த 14.02.2026 ஆம் தேதியில் இருந்து நீதிமன்ற காவலில் இருந்து வருவதாகவும், அவருக்கு பிணையம் வழங்கும் போது தக்க பிணையதாரர்களை முன்னிலைப்படுத்த தயாராக இருப்பதாகவும் மனுதாரர் தரப்பில் கூறி, இந்த மனுவை தாக்கல் செய்துள்ளார்கள்.

2. மனுதாரரை பிணையில் விடும்பட்சத்தில் இது போன்ற குற்ற சம்பவங்களில் ஈடுபடக்கூடும் என்றும், சாட்சிகளையும் கலைக்க நேரிடும் என்றும், நீதிமன்ற விசாரணைக்கு ஆஜராகமல் தலைமறைவாக கூடும் என்றும், எதிரி மீது 5 வழக்குகள் நிலுவையில் உள்ளது என்றுக் கூறி, எதிரியை பிணையில் விடுவிக்க எதிரிமனுதாரர் தரப்பில் ஆட்சேபணை செய்யப்பட்டது

3. இரு தரப்பிலும் கேட்கப்பட்டது. வழக்கு ஆவணங்கள் அனைத்தும் கவனமாக பரிசீலனை செய்யப்பட்டன.

S VARATHARAJAN
Digitally signed by S VARATHARAJAN
Date: 2026.03.06 17:29:35 +0530

4. அரசு தரப்பு வழக்கானது, எதிரி நிகழ்நிலை புகார்தாரர் ஆட்டு தொழுவத்தில் நுழைந்து ஆட்டுத் தொழுவத்தில் இருந்த சுமார் 35,000/- மதிப்புள்ள வெள்ளாட்டு கிடா-3, மறி ஆடு 1ஐ திருடி சென்று குற்றம் புரிந்துள்ளார்கள் என்பது அரசுதரப்பு வழக்காகும். மனுதாரர்/எதிரி மாரிச்செல்வம் என்பவருக்கு எதிராக கீழ்க்கண்ட வழக்குகள் பதிவு செய்யப்பட்டுள்ளது என்று காவல்துறை தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள அறிக்கையில் இருந்து தெரிய வருகிறது.

| வ.எண் | காவல் நிலையம் | குற்ற எண். | குற்றப்பிரிவுகள் |
|---|---|---|---|
| 1. | தென்காசி மாவட்டம், அய்யாபுரம் காவல் நிலையம் | 30/2022 | 379 IPC |
| 2. | தென்காசி மாவட்டம், குருவிகுளம் காவல் நிலையம் | 31/2026 | 20(b) (ii) (A) 8 (C) NDPS ACT |
| 3. | தென்காசி மாவட்டம், குருவிகுளம் காவல் நிலையம் | 601/2025 | 27(2) ARMS |
| 4. | தூத்துக்குடி மாவட்டம், கழுகுமலை காவல் நிலையம் | 199/2022 | 379 IPC |
| 5. | தூத்துக்குடி மாவட்டம், கோப்பம்பட்டி காவல் நிலையம் | 36/2025 | 303(2) BNS |
| 6. | தூத்துக்குடி மாவட்டம், கோவில்பட்டி காவல் நிலையம் | 137/2025 | 305 BNS |

இவ்வழக்கில் திருடப்பட்ட மூன்று ஆடுகள் எதிரிகளிடமிருந்து கைப்பற்றப்பட்டுள்ளது. திருடப்பட்ட ஒரு ஆட்டை விற்பனை செய்து பணத்தை செலவு செய்து விட்டதாக ஒப்புதல் வாக்குமூலம் பதிவு செய்யப்பட்டுள்ளது. இந்த எதிரி தரப்பு வழக்கறிஞர், விற்பனை செய்யப்பட்டதாக கூறும் ஆட்டின் மதிப்பு ரூ.10,000/-ஐ எதிரி நீதிமன்றத்தில் செலுத்த தயாராக இருப்பதாக தெரிவித்தார். எதிரிக்கு முன் வழக்குகள் 6 இருக்கின்றது என்று அரசு தரப்பு பதிலில் இருந்து தெரிய வருகிறது. எதிரி 14.02.2026 ம்



S VARATHARAJAN
Digitally signed by S VARATHARAJAN
Date: 2026.03.06 17:30:00 +0530

தேதியிலிருந்து இந்த வழக்கில் நீதிமன்ற காவலில் இருந்து வருகிறார். இந்த காலக்கட்டத்திற்குள் வழக்கின் புலன் விசாரணை முடிக்கப்பட்டிருக்க வேண்டும். எனவே, இந்த எதிரியை இந்த வழக்கில் மேற்கொண்டும் நீதிமன்ற காவலில் வைத்திருக்க வேண்டிய அவசியம் இல்லை என்று இந்த நீதிமன்றம் கருதி, கீழ்க்கண்ட நிபந்தனைகளுடன் அவர் பிணையில் விடுவிக்கப்படுகிறார்.

<u>நிபந்தனைகள்:-</u>

அ. மனுதாரர்/எதிரி ரூ.10,000/-ஐ இந்த வழக்கில் வைப்பீடு செய்ய வேண்டும்.

ஆ. மனுதாரர் அவரும், அவருக்காக இரண்டு பிணையதாரர்களும் ரூ.10,000/-க்கான பிணைமுறி ஆவணம் எழுதிக் கொடுக்க வேண்டும்.

இ. மனுதாரர் இவ்வழக்கு சாட்சிகளை கலைக்கவோ/அழிக்கவோ கூடாது.

ஈ. இவ்வழக்கு முடியும் வரை மனுதாரர் தலைமறைவாக கூடாது. இவ்வழக்கு விசாரணையில் தவறாமல் கலந்து கொள்ள வேண்டும்.

உ. இதுபோன்ற குற்றச்செயல்களில் ஈடுபடக்கூடாது.

என்னால் நேரடியாக தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, அவரால் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் சரிபார்க்கப்பட்டு, 2026 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 6ம் நாளான இன்று இந்நீதிமன்றத்தில் அவையறிய பகரப்படுகிறது.

S VARATHARAJAN
Digitally signed by S VARATHARAJAN
Date: 2026.03.06 17:30:08 +0530

நீதித்துறை நடுவர் எண்.2

சாத்தூர்.